Southern Builder

Bulletin of Builders' Association of India - Southern Centre

For Private Circulation only

OCTOBER 2024

திரு. V.G.சக்திகுமார், Chairman & MD,
Schwing Stetter (I) Pvt. Ltd., அவர்கள்
கட்டுநர் சமுதாயத்திற்கு ஆற்றிய சேவையினை
பாராட்டி 25.10.2024 அன்று நடைபெற்ற
கட்டுநர் தின விழாவில் கவுரவிக்கப்பட்டார்

jayaraj
Leaders in Timber

JAYARAJ INTERNATIONAL (P) LTD.

Timber Yard : No. 19, Puzhal Union Road,
Vadaperumbakkam, Chennai – 600 060
Projects Contact : **9840070992** | 9840815812 | 7092212666
Email : jayarajenquiry@gmail.com
Website : www.jayarajtimber.com



T. RAJA SEKHAR
MANAGING DIRECTOR

LEADERS IN TEAKWOOD

TEAK WOOD LOGS | TEAK SIZES | TEAK PLANKS | DOORS & WINDOWS

Our company has 30+ years of expertise in Teakwood, importing from around 15 countries across the World. We operate from **Chennai offering excellent** quality, **pest-free Teakwood** at **competitive** prices to our customers. We supply PAN India to **Builders, Saw millers, Traders, Furniture Manufacturers, etc.**

Southern Builder

Bulletin of Builders' Association of India - Southern Centre

For Private Circulation only

Offical Journal of Builders' Association of India - Southern Centre. October 2024

Builders' Association of India
Southern Centre
Plot No. A1, 1st Main Road, Opp. to AIEMA, Industrial Estate, Ambattur, Chennai - 600 058.
(T) 044-2625 2006 | (E) baisouthern1950@gmail.com | (W) www.baisouthern.com

OFFICE BEARERS - 2024-2025

Mr. N G LOKANATHAN - CHAIRMAN
Mr. R NIMRODE - VICE CHAIRMAN
Mr. K GOPINATHAN - HON. SECRETARY
Mr. G DIWAKAR - HON. TREASURER
Mr. A SATHYANARAYANA - HON. JOINT SECRETARY
Mr. A N BALAJI - IMM. PAST CHAIRMAN

EDITOR

Mr. S AYYANATHAN
98410 46799

EDITORIAL BOARD

MR. S D KANNAN
MR. S RAMAPRABHU
MR. P K P NARAYANAMURTHY

ADVISORS

Bhisma R RADHAKRISHNAN
All India Past President & Trustee - BAI

Mr. Mu MOAHAN
Trustee & All India Past President - BAI

CONTENTS

ஆசிரியர் மடல் 04
மய்யத்தலைவர் மடல் 05
இரத்தன் நவால் டாட்டா இதய அஞ்சலி 06
Steel-fibre-reinforced Concrete 08
Tax Corner 14
Real Estate Update 21
Photo Page 23
Southern Centre Activities 45

TARIFF

Si. No.	Description	Rate Per Issue	Rate Per Annum
1.	Multi Colour A4 Size Back Cover	Rs.40,000/-	Rs.4,00,000/-
2.	Multi Colour A4 Size Rear Cover Inner	Rs.30,000/-	Rs.3,00,000/-
3.	Multi Colour A4 Size Front Cover Inner	Rs.30,000/-	Rs.3,00,000/-
4.	Multi Colour A4 Size Inner Page	Rs.15,000/-	Rs.1,50,000/-
5.	Multi Colour A4 Size Half Size Inner Page	Rs.10,000/-	Rs.1,00,000/-
6.	Black & White A4 Inner Page	Rs.10,000/-	Rs.1,00,000/-
7.	Black & White A4 Half Page Inner Page	Rs.6,000/-	Rs.60,000/-

Extra 5% GST

Disclaimer
The Materials Provided in this Publication are a free Service to its readers. No copyright Violations are intended. Views expressed in this publication are not necessarily of BAI. No direct or indirect or consequential liabilities are acceptable on the information made available herein.

ஆசிரியர் மடல்

அன்புடையீர் வணக்கம்,

மகிழ்ச்சி என்பது மனிதன் வாழ்க்கையில் மிக முக்கியமான உணர்வாகும். ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கையில் மகிழ்ச்சி அடைய விரும்புகிறான். ஒருவரின் வாழ்க்கையில் மகிழ்ச்சி உருவாவதற்கான பாதைகள் பலவாக உள்ளன. அந்த வகையில் ஒரு கட்டுனராக மகிழ்ச்சி அடைவதற்கும் சில முக்கிய கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகள் உள்ளன. கட்டுனர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சியைப் பெறுவது பலவிதமான துறைகளில் முன்னேற்றம் அடையும் விதமாக இருக்கும். இதற்கு நாம் சில அடிப்படை குறிப்புகளை கவனித்தால், நம் வாழ்க்கையும் தொழிலும் சிறப்பாக வளரும்.

வாழ்க்கையில் நோக்கங்கள் அல்லது இலக்குகளை தெளிவாக அமைத்துக் கொண்டு, அவற்றை அடைய முயலுதல் அதிக மகிழ்ச்சி அளிக்கும். குறிக்கோள் இல்லாமல் வாழ்வது வாழ்க்கையை துன்பமாக மாற்றும். இதனால்தான், சுய வளர்ச்சி மற்றும் தன் முனைப்போடு செயல்படுவது முக்கியம்.

ஒரு கட்டுனராக பணியில் ஈடுபடும்போது தொழிலுக்கான ஆற்றல் மற்றும் ஆர்வம் முக்கியமாக இருக்க வேண்டும். எதைச் செய்தாலும் அதில் ஈடுபட்டு, ஆர்வமுடன் செயல்படுவது ஒரு மகிழ்ச்சியான வாழ்க்கையின் அடித்தளம் ஆகும். இதனால் தொழில் மீது பெரும் அக்கறை மற்றும் மன நிறைவு ஏற்படும்.

ஒரு ஆகச்சிறந்த கட்டுமானத் தொழில் வல்லுனராக ஆக விரும்புபவருக்குக் கட்டிடத் தொழில் நுட்பம், வடிவமைப்பு, பொருட்கள் மற்றும் இயந்திரங்களின் பயன்பாடு, கட்டுமான விற்பனைச் சந்தை நிலவரம், ஆகியவற்றை பற்றி ஆழ்ந்த மதி நுட்பம் இருக்க வேண்டும்.

ஒரு கட்டுமானத் தொழிலதிபராக தரமான கட்டிடங்களை உருவாக்குவது மிகவும் முக்கியம். வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பெற, பொருள் தேர்வில் கவனம் செலுத்த வேண்டும். கட்டுமானத்திற்கான பொருட்கள் நன்கு தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த தரமுள்ளதாக தேர்வு செய்யப்பட வேண்டும். கட்டிடத்தொழில் என்பது குழு வேலை ஆகும். ஒருவரின் முயற்சி மட்டுமே போதுமானது அல்ல. மற்றவர்கள் உடன் சேர்ந்து செயல்பட வேண்டும். பரஸ்பர அக்கறை, வேலைபார்க்கும் இடத்தில் நல்ல பராமரிப்பு தொழிலாளர்களுடன் ஒரு நல்ல உறவுகளை உருவாக்கி, அனைவரையும் சந்தோஷமாக வைத்திருப்பது அவசியமாகும். தொழிலாளர்களுடன் அடிக்கடி சிறு வெற்றிகளை கொண்டாடுதல், சாதனைகளை பாராட்டுதல், ஊக்கத்தைப் பெறுவதற்கு வழிவகுக்கும். கட்டிடப் பணிகளை முடித்து, அதன் மூலம் ஒரு கட்டிடத்தை உருவாக்கும் பொழுது அந்த வெற்றி பெருமிதத்தை வழங்குகிறது. இவை கட்டுனர்களின் மனதில் தெளிவு மற்றும் மன நிறைவை உறுதி செய்ய உதவுகிறது.

ஒவ்வொரு கட்டிடங்களின் பணியும் ஒரு புதிய அனுபவம் மற்றும் புதிய கற்றல் ஆகும். தொழில்முறை வளர்ச்சி புதிய திறன்கள் மற்றும் உத்திகளைக் கற்றுக் கொள்வதன் மூலம் ஒரு கட்டுநராக மகிழ்ச்சியடைய முடியும். எப்போதும் புதிய தொழில்நுட்பத்தை கற்று செயல்படுத்துதல் ஒருவரின் வாழ்க்கையில் மகிழ்ச்சியையும், மன அமைதியையும் உருவாக்கும்.

தொழில் துவங்கும்போது, தினசரி மற்றும் வாராந்திர திட்டங்களை சரியாக வகுக்க வேண்டும். கட்டுமானத் துறையில் பணிகள் பெரும்பாலும் கடுமையாகவும் சவாலானதாகவும் இருக்கும். எனவே தொழிலின் முக்கியத்துவத்தைக் கருதி சவால்களை ஏற்று அவற்றை சிறப்பாகத் திட்டமிடுவதன் மூலம் நம் தொழிலில் மேன்மையடைய முடியும். இது தொழிலுக்கு மட்டுமல்ல, வாழ்ச்கையில் மகிழ்ச்சியும் மன நிறைவையும் தேடும் வழி.

கட்டுமான தொழில் மேன்மை அடைவதற்கு தொழிலாளர்கள் மற்றும் பயனாளர்கள் மனம் நிறைந்து மகிழ்ந்திடும் வகையில் கட்டுனர்களின் திட்டமிடுதல் செயலாக்கம் அமைந்திட வேண்டும்.

நன்றி, வணக்கம்

என்றும் அன்புடன்

S. அய்யநாதன்

மய்யத்தலைவர் மடல்

தென்னக மய்ய உறுப்பினர்களுக்கு வணக்கம் !

வெள்ளத்து அனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்

- திருக்குறள்

பொருள்: வெள்ளம் போன்று கரை கடந்துவரும் துன்பமும் அறிவுடையார் தன் உள்ளத்தின் உறுதியால்
துன்பத்தின் இயல்பு இது என உணர்ந்த அளவிலேயே துன்பமும் மாயமாக மறையும்.

10.10.2024 அன்று TNRERA–வின் ஆலோசகராகவும் தமிழ்நாடு அடுக்குமாடி குடியிருப்போரின் பயன்பாட்டிற்கான விதிமுறைகளை தமிழக அரசு புதிதாக உருவாக்கியுள்ளது. இதில் தென்னக மய்யத்தின் ஆலோசனைகள் வரவேற்கப்பட்டு Fox Mandal & Associates மூலம் தொகுத்து வழங்கப்பட்டது. தென்னக மய்யத்தின் சார்பாக கட்டுநர்களின் இன்னல்களும், பொது மக்களின் இன்னல்களும் தொகுத்து கொடுக்கப்பட்டது.

நமது அறக்கட்டளை வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் 17.10.2024 அன்று 2.00 மணிக்கு கட்டுநர் தின விழாவை முன்னிட்டு " RESILIENT TODAY- SUSTAINABLE TOMORROW " என்ற தலைப்பின் கீழ் பொறியியல் கல்லுரி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி நடைபெற்றது. இதில் Velammal Engg. College, Sri. Venkateswara College of Engg, Sri Siva Subramaniya Nadar College of Engg. Saveetha Engineering College, R.M.K. Engineering College ஆகிய கல்லுரியிலிருந்து 23 மாணவர்கள் கலந்து கொண்டனர். போட்டியில் பங்குபெற்று வெற்றி பெற்ற மாணவர்களுக்கு 3 தனி நபர் பரிசுகள் மற்றும் பங்கேற்பு சான்றிதழ்களும் அறிவிக்கப்பட்டன.

23.10.2024 அன்று சென்னையில் உள்ள Hotel ITC Grand Chola-வில் CII ஆல் Infra Next 2024 என்ற நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் நமது மய்யத்திலிருந்து 30க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

25.10.2024 அன்று தென்னக மய்யத்தின் 41வது கட்டுநர் தின விழா கொண்டாடப்பட்டது. இதில் முதன்மை விருந்தினராக சட்ட மன்ற உறுப்பினர் திரு. ருபி R மனோகரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். M/s. Schwing Stetter India நிறுவனத்தின் Chairman & Managing Director திரு. V.G. சக்திகுமார் அவர்களை தென்னக மய்யத்தின் சார்பாக கட்டுநர் சமுதாயத்திற்கு அவர் ஆற்றிய சேவையை பாராட்டி கவுரவிக்கப்பட்டார். நமது தேசியத்தலைவர் திரு. K. விஸ்வநாதன் அவர்கள் முன்னிலையில் நமது அகில இந்திய முன்னாள் தலைவர் மற்றும் காப்பாளர் பீஷ்மா திரு. R. இராதாகிருஷ்ணன் அவர்கள் முக்கிய உரையாற்றினார். கவுரவ விருந்தினர்களாக சென்னை மாநகராட்சி தலைமைப் பொறியாளர் திரு. S. ராஜேந்திரன் அவர்களும், அகில இந்திய துணைத்தலைவர், தென் பிராந்தியம் II திரு. R. சிவக்குமார் அவர்களும், தமிழ்நாடு, புதுவை மற்றும் அந்தமான் உள்ளடக்கிய மாநிலத்தலைவர் திரு. B. பழனிவேல் அவர்களும், காப்பாளர் மற்றும் அகில இந்திய முன்னாள் தலைவர் திரு. Mu. மோகன் அவர்களும் கவுரவ விருந்தினர்களாக கலந்து கொண்டனர். இவ்விழாவில் சற்றொப்ப 700க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் அப்பல்லோ மருத்துவமனை மற்றும் சவீதா மருத்துவமனை மருத்துவர்களால் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அனைவருக்கும் அறுசுவை விருந்து பரிமாறப்பட்டது.

என்றும் அன்புடன்,
N.G. லோகநாதன்
மய்யத்தலைவர்

இரத்தன் டாட்டா அஞ்சலி

மும்பையில் டிசம்பர் 28, 1983 இல் ரத்தன் டாட்டா பிறந்தார். மும்பையில் பேரும் புகழும் வளமும் மிகுந்த குடும்பத்தில் பிறந்த ரத்தன் டாடா, டாடா குழும நிறுவனர் ஜாம்ஷெட்ஜி டாடாவின் கொள்ளுப்பேரன் ஆவார்.

கல்விப் பின்னணி

1962ம் ஆண்டு அமெரிக்காவின் கார்னெல் பல்கலைக்கழகத்தில் கட்டமைப்புப் பொறியியலில் பி.எஸ்.சி பட்டம் பெற்றார். அதன் பிறகு ஹார்ட்வர்டு வணிகக் கல்லுரியில் உயர் மேலாண்மைப் பட்டத்தையும் பெற்றார்.

டாடா குழுமத்தின் தலைமைத்துவம்

ஜே ஆர் டி டாட்டாவின் அறிவுரையின்படி, ஐபிஎம் நிறுவனத்தில் கிடைத்த வேலையை உதறிவிட்டு இவர் 1962 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் டாட்டா குழுமத்தில் சேர்ந்தார். 1991 முதல் 2012 வரை இருபது வருடங்களுக்கு மேலாக டாடா சன்ஸ் தலைவராக ரத்தன் டாடா பணியாற்றினார். மேலும் 216ல் தற்காலிக தலைவராக பதவியில் இருந்தார்.

உலகளாவிய விரிவாக்கம்

டாடாவின் தலைமையின்கீழ் டாடா குழுமம் கணிசமாக விரிவடைந்து 100க்கும் மேற்பட்ட நாடுகளில் செயல்பட்டு மார்ச் 2024ல் முடிவடைந்த ஆண்டிற்கு 165 பில்லியன் வருவாயை எட்டியது

ஐகானிக் கையகப்படுத்துதல்கள்

2007ல் பிரிட்டீஷ் ஸ்டீல் தயாரிப்பாளர் கோரஸ் மற்றும் 2008ல் சொகுசு கார் தயாரிப்பாளரான ஜாகுவார் லேண்ட் ரோவர் உட்பட குறிப்பிடத்தக்ககையப்படுத்துதல்களுக்கு அவர் தலைமை தாங்கினார்.ரத்தன் டாடா மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் தொழில்களை உருவாக்கி அதை வெற்றிகரமாக நடத்துவதில் வல்லவர் ஆவர். அந்த வகையில் நடுத்தரக் குடும்பத்தில் இருப்பவர்கள் கார் வாங்குவதற்கான சூழலை உருவாக்கியவர் ரத்தன் டாடா. ஒரு நாள் சாலையில் செல்லும் போது ஒரு குடும்பத்தில் உள்ள 4 பேரும் இருசக்கர வாகனத்தில் செல்வதைக் கண்டார். இதற்கு தீர்வு காணும் வகையில் உருவாக்கப்பட்டதுதான் டாடா நானோ கார். நடுத்தர வர்க்கத்தினர் வாங்கும் வகையில் சிறிய அளவிலான நானோ காரை உருவாக்கி அதை ஒரு லட்சம் ருபாய்க்கு விற்பனை செயத்து டாடா குழுமம். இந்த திட்டம் ரத்தன் டாடாவின் கனவு திட்டம் ஆகும்.

அட்வான்ஸ் கண்டுபிடிப்புகள்

ரத்தன்டாடாவின் கீழ் டெஹ் குழுமம் இந்தியாவின் முதல் சூப்பர் ஆப் டாடா நீயூவை அறிமுகப்படுத்தியது. மென் பொருள் முதல் ஸ்போர்ட்ஸ் கார்கள் வரையிலான ஒரு

போர்ட்ஃபோலியோவுடன் நிறுவனம் ஒரு பரந்த சர்வதேச நிறுவனமாக வளர்ந்தது

குறிப்பிடத்தக்க நெருக்கடிகள்

2008 மும்பை பயங்கரவாதத் தாக்குதலின் போது டாடா குழுமம் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டது. இது குழுவின் முதன்மை ஓட்டலான மும்பையின் தாஜ்மஹால் பேலஸ் ஓட்டலை குறிவைத்தது.

இறுதி வணிகப்போர்

2021 ம் ஆண்டில் ஏர் இந்தியாவை வெற்றிகரமாக மீண்டும் கையகப்படுத்தியது. அது தேசியமயமாக்கப்பட்ட கிட்டத்தட்ட 90 ஆண்டுகளுக்குப் பிறகு டாடா குழுமத்திற்கு மீட்டமைத்தது அவரது கடைசி முக்கிய சாதனைகளில் ஒன்றாகும்

டாடாவின் நற்பணிகள்

பத்மவிபூஷன், நற்பணிக்கான கார்னகி பதக்கம், சிங்கப்பூர் அரசு வழங்கிய கவுரவக் குடிமகன் அந்தஸ்து, பிரிட்டிஷ் அரசின் ஹானரரி டைட் கமாண்டர் ஆஃப் பிரிட்டிஷ் எம்பயர் ஆகிய கவுரவங்களைப் பெற்றுள்ளார். டைம் இதழ் வெளியிட்ட உலகின் செல்வாக்கு படைத்த 100 பேர் பட்டியல் மற்றும் உலகின் சக்திவாய்ந்த நபர்கள் பட்டியலில் இடம்பெற்றவர். இந்தியாவின் பல்வேறு அமைப்புகளில் மூத்த பொறுப்புகளில் பணியாற்றும் ரத்தன் டாட்டா, வணிகம் மற்றும் தொழில்கள் குறித்த பிரதம மந்திரியின் மன்றத்திலும் உறுப்பினராக இருந்தார். பல்வேறு வெளிநாட்டு அறக்கட்டளைகளுக்கு அறங்காவலர் குழு உறுப்பினராக இருந்தவர். பில்கேட்ஸ் நிறுவனத்தின் பில்கேட்ஸ் இந்திய எய்ட்ஸ் திட்டக் குழுவிலும் பங்கு வகித்தார். 2012 வரை டாடா குழுமத் தலைவராக இருந்த இவர் டாடா குழும அறக்கட்டளைகளில் தலைவராக இருந்து வழிநடத்தியவர். தனது வருமானத்தில் சுமார் 60% லிருந்து 65% கிட்டத்தட்ட 8,20,000 கோடி தொண்டுக்கு நன்கொடையாக அளித்து, உலகின் மிகப் பெரிய பரோபகாரர்களில் ஒருவராவார். “டாடா டிரஸ்ட்ஸ்” மூலம் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை மற்றும் ஆரோக்கியம், மருத்துவம், கிராமப்புற மேம்பாடு மற்றும் வாழ்க்கை மேம்பாடு சார்ந்த திட்டங்களுக்கு ஆதரவு தந்தவர். இதில் டாடா குழும பங்குதாரர்களின் பங்கும் இருந்தது குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் முக்கிய தொண்டு நிறுவனங்களில் டாடா டிரஸ்ட்ஸ் உள்ளது.

கொரோனா பேரிடரின்போது சுமார் 500 கோடி ருபாயை நன்கொடையாக வழங்கிய கொடை உள்ளம் படைத்தவர் தான் படித்த ஹார்வர்ட் பிசினஸ் ஸ்கூலில் பிரத்யேக மையம் நிறுவ 50 மில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்கியவர். கடந்த 2008ல் மும்பையில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் மறுவாழ்வுக்காக தாஜ் பொது சேவை நல அறக்கட்டளையை தொடங்கினார். பல்வேறு தருணங்களில் அவரது சமூகப் பணிக்காக புகழ்ந்து கொண்டாடப்பட்டவர். முக்கியமாக அவரை அனைவரும் எளிதில் அணுக முடியும் அந்த வகையில் தனது இயக்கத்தை அவர் கொண்டிருந்தார். மூத்த குடிமக்களுக்கு உதவும் உறுதுணை (Companionship) சேவையை வழங்கி வரும் ‘Goodfellows’ ஸ்டார்ட் அப் நிறுவனத்தில் கடந்த 2022ல் அவர் முதலீடு செய்தார். இதை சாந்தனு நாயுடு நிறுவியது குறிப்பிடத்தக்கது.

இப்படியாக அவரது ஒவ்வொரு செயலும் சமூகத்தில் உள்ள அனைத்து தரப்பு உள்ளங்களையும் ஈர்த்தது அதன் காரணமாகவே 140 கோடி மக்கள் தொகை கொண்டு இந்திய தேசத்தில் கொண்டாடப்படும் தொழிலதிபர்களில் முதன்மையானவராக உள்ளார். அக்டோபர் 10, 2024 அன்று பூவுலகை விட்டு அவர் மறைந்தாலும் அவரது பேரை சொல்லும் வகையில் டாடா குழுமம் அவர் விட்டு சென்ற பணிகளை தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Steel-fibre-reinforced Concrete

A.R.Santhakumar
Former Emeritus Professor,
Department of
Civil Engineering IIT Madras

Advanced cement based materials and improved concrete construction techniques provide opportunities for the design of structures to resist severe loads resulting from earthquakes, impact, fatigue, and blast environments. Conventional concrete cracks easily. When concrete is reinforced with random dispersed fibres, we get favourable behaviour for repeated loads. Fibres prevent microcracks from widening. Addition of fibres makes components ductile and tough. This chapter systematically describes the basic properties and the theoretical background for application of steel-fibre-reinforced concrete (SFRC) for structural components subjected to dynamic loads. It also gives experimental evidence which shows the potential of the extensive use of this material for special applications in earthquake-prone and blast-resistant structures.

Research carried out in various parts of the world has established that addition of fibres improves the static flexural strength, fatigue, ductility, and fracture toughness of the material. Recent investigations have also given rise to highly reinforced SFRC containing up to 20% volume of steel fibres. The recent developments are due to the introduction of a new generation of additives such as superplasticizers and microsilicas, which allow the use of high volume of steel fibres and high-strength concrete. Figure 17.1a is a four-phase representation which defines fibre-reinforced mortar and concrete. Table 17.1 gives typical ranges of the application of fibre-reinforced material.

Table 17.1 Typical ranges of application of fibre-reinforced concrete

Volume fraction (%)	Matrix	Application
$V_f < 0.5$	Concrete	Pilecaps members
$0.5 < V_f < 3$	Concrete	Pavements, joints, machine foundation
$3 < V_f < 8$	Mortar	Cement sheets, repair works
$8 < V_f < 20$	Paste/slurry	Asbestos cement

Source: Antoine 1987



Four-phase representation of FRC (Source: Antoine 1987)

Basic Properties

The durability of concrete when reinforced with conventional rebars is a major concern in aggressive environments. To address this problem, there have been efforts, in recent years, to develop alternatives to conventional rebars. Fibre-reinforced plastics and fibre-reinforced concrete (using different types of fibres) have shown better behaviour because of their inherent ability to stop or delay crack propagation. Reinforcing fibres stretch more than concrete under loading. Materials used in fibre reinforcing include acrylic, asbestos, cotton, glass, nylon, polyester, poly ethylene, poly propylene rayon, rock wool, and steel. Acid-resistive glass and steel are common. Plastic fibres are used because of their ability to resist corrosion. Natural fibres have little value because they are prone to decay.

The percent of fibres in concrete mix is based on volume and is expressed as a percent (fraction) of mix. 1% to 2% of fibers are common.

The main properties of FRC in tension, compression, and shear are influenced by the type of fibre, volume fraction fibres, aspect ratio (the length of the fibre divided by its diameter), and the orientation of fibre in the matrix.

In this section, we consider the properties of steel fibre concrete with random orientation, which is the most common one for civil engineering applications.

Behaviour in Tension

The most significant effect of incorporating fibres is to delay and control the tensile cracking of this composite material. The fibres provide a ductile member in a brittle matrix and the resulting composite has ductile properties. The fibre and the matrix share the tensile load until the matrix cracks and then almost the full force gets transferred to the fibre. This is a predominant feature of fibre-reinforced concrete (FRC). This mechanism gives rise to favourable dynamic properties such as energy absorption and fracture toughness that distinguish FRC from conventional concrete.

The fracture surface is shown in Fig.17.1b

typical fractured surface of a fiber concrete specimen

Studies on the tensile strength of fibrous composite have been reported in reference Mangat (1976). The effect of fibres in a cementitious material is principally to cause relief of tensile stress at the crack tip and prevent unstable crack propagation. Kelly (1970) investigated the mechanism of fibre pull-out. The typical load-extension curve presented by him is reproduced in Fig. 17.2. Debonding of fibre characterizes the straight line portion of the curve OA. In the case of short fibres, the debonding occurs at maximum load. The debonding energy per unit area is obtained by dividing the area OAB under the stress–strain curve by the surface area of the fibre. The additional energy dissipation of fibre concrete results from the debonding energy as well.



Typical load-extension curve for fibre pull-out test
(Source: Kelly 1970)

Behaviour in Compression

Though the increase in the compressive strength of fibre-reinforced concrete is marginal and ranges from 0% to 20%, the post-cracking compressive stress–strain response changes substantially. This change is generally characterized by a noticeable increase in strain at peak load and a significant increase in ductility beyond ultimate load, resulting in substantially higher toughness. This increased toughness is advantageous in preventing sudden and catastrophic failures especially under earthquake and blast type of loading. The typical increase in the toughness index varies between 200% and 300% (Ramakrishnan 1987). There is no appreciable change in the linear part of the stress–strain curve in compression for randomly oriented fibres as can be seen in Fig. 17.3.

The improvements in ductility and energy absorption capacity resulting from the increase in fibre volume fraction are comparable to those improvements due to the effect of confining steel of conventional concrete by transverse steel as shown in Fig. 17.4. Since confinement by transverse steel produces improvements of the same nature as fibre reinforcement in the compressive behaviour of concrete for a certain reinforcement index of each fibre type, there exists a confinement condition which results in comparable compressive stress–strain relationship of fibre-reinforced concrete. Thus the characteristic model for FRC consists of two curvilinear ascending and descending branches similar to confined concrete as shown in Fig. 17.5. It is evident that the improvement in material toughness can be assessed as the ratio of total area (A1 + A2) under the stress–strain curve up to a strain limit beyond the peak stress to the area up to its peak (A1). Thus the benefits of confining steel in the conventional earthquake resistance design can also be attained by suitable inclusion of fibres i.e., by using fibre-reinforced concrete.



Typical stress–strain curves for fibre-reinforced concrete in compression (Source: Ramakrishnan 1987)

Effect of fibre reinforcement and containment by transverse steel on compressive behaviour of concrete (h'is height of the prism and s is space) (Source: Ramakrishnan 1987)



Characteristics of the compressive stress–strain relationship of concrete and fibre-reinforced concrete

Behaviour of Reinforced FRC

When fibres are used in members which are also reinforced with conventional steel bars, it is necessary to examine their behaviour in tension more closely (Liquin & Guofan 1987). The typical tensile stress–strain curve of steel-reinforced FRC is shown in Fig. 17.6. Though more ductile, as seen from Fig. 17.6, the contribution of fibres for strength is not significant (Fig. 17.7).



Fig. 17.6 Tensile stress–strain curve for FRC (Source: Liquin & Guofan 1987)



Stress–strain relationship for steel-reinforced FRC (Source: Liquin & Guofan 1987)

Behaviour of FRC Under Shear

The shear strength and toughness index of compact cube specimens (Barr 1987) are shown in Fig. 17.8. A perusal of the graph shown in Fig. 17.8 reveals that the shear strength was not affected by fibre volume. However, the post-cracking toughness increases uniformly with increase in fibre content. This again shows a favourable FRC behaviour in earthquake- and blast-prone areas.



Shear stress and toughness indices of SFRC
(Source: Barr 1987)

Behaviour of FRC Under Flexure and Cyclic Loading

Fibre-reinforced concrete by virtue of improved toughness functions better under cyclic loading. Figure 17.9 shows the load–deflection behaviour of SIFCON beams. Note the excellant behaviour of beams under cyclic and reversed cyclic loads.



Fig. 17.9 Flexural behaviour of SIFCON beams (Source: Patnaik & Jain 1988)

Design Requirements

Earthquake-resistant design involves the determination of expected seismic force and designing the structural members to resist this force. Aseismic codes do not intend to ensure that the structure shall suffer no damage during strong earthquakes. This is because a structure that can withstand strong earthquakes without any damage will be too expensive to build. However, though damages are inevitable, the structure should not collapse. For this, the behaviour of the structure in the post-elastic range becomes vital. Hence, non-linear behaviour and toughness or ductility are of great importance in the aseismic design. Ductility of a structure means the capacity to deform to a large extent without loss of strength before collapse.

Consider the member force–deformation relationship shown in (Fig. 17.10). The maximum deflection □max developed by the member is the same regardless of the strength property of the two systems I and II compared. The ratio of the maximum deflection to the elastic limit deflection is equal to the ratio of the force developed in purely elastic response of I to the member yield force of response II:



Definition of ductility factor

$$\frac{\delta_{max}}{\delta_y} = \frac{f_{max}}{f_y}$$

The ductility factor of the member in response II is

$$\mu = \frac{\delta_{max}}{\delta_y}$$

i.e..

$$f_y = \frac{1}{\mu} f_{max}$$

The above equations demonstrate that the member forces are reduced with increase in ductility factor, indicating that the ductility of the member can be advantageously used for earthquake-resistant design. The ductility of the structure depends on the ductility of the members and that of members on the material, though a direct correlation cannot be established.

In fact, concrete as we all know is not a ductile material, but, if reinforced with dispersed steel fibres properly, can be made to behave in a ductile manner. This can be achieved by careful design of reinforcements. The toughness possessed by FRC can be advantageously used for imparting ductility to concrete members.

Theoretical Considerations

Beyond the cracking limit, the following two limit states can be identified for both RC and FRC beams.

(i) The limit state of the incipient yield of the section indicated by the yielding in steel and concrete or fibrous concrete reaching a maximum strain of 0.002.

(ii) The limit state of collapse indicated by concrete and fibrous concrete reaching a strain limit of 0.0035 and 0.0095, respectively. While 0.0035 is an accepted limit for concrete, 0.0095 for fibrous concrete is chosen based on tests

(Fig. 17.3).

With the above assumptions, the following basic equations have been worked out.

For concrete

(i) At yield, the yield curvature $\phi_y = \frac{0.002}{kd}$

where the depth of the neutral axis is

$$kd = \frac{A_s f_y - A_s' f_y}{0.85 f_s' b(2/3)}$$

(ii) At ultimate, the ultimate curvature

$$\phi_u = \frac{0.0035}{c}$$

where the depth of the neutral axis is

$$c = \frac{A_s f_y - A_s' f_s}{0.85 \times 0.85 f_c' b}$$

For FRC

(i) At yield, the depth of neutral axis is

$$kd = \frac{A_s f_y + 0.5\sigma_t - A_s' f_s'}{0.85 f_c' b(2/3) + 0.5\sigma_t b}$$

where □t is the tensile strength of FRC and the yield curvature is

$$\phi_y = \frac{0.002}{kd}$$

(ii) At ultimate, the depth of the neutral axis is

$$c = \frac{A_s f_y + 0.5(D-c)b\sigma_t - A_s^{'} f_s^{'}}{0.85 \times 0.85 f_c^{'} b}$$

and the ultimate curvature is

$$\phi_u = \frac{0.0095}{c}$$

In ductility predictions it is necessary to determine the deformation that has occurred when the ultimate moment is reached. The actual curvature distribution at ultimate moment can be idealized into elastic and inelastic regions of a typical beam of span 2L as shown in Fig. 17.11.

It may be noted that the curvature ductility

$$\mu_\phi = \frac{\phi_u}{\phi_y}$$

whereas the member ductility is

$$\mu_\Delta = \frac{\Delta_u}{\Delta_y}$$

Wherein the deflection at yield

$$\Delta_y = (\phi_y l / 2) \times (2/3) l$$

and the deflection at ultimate



Curvature distribution along the length of the beam: (a) beam, (b) bending moment diagram, and (c) curvature diagram

$$\Delta_u = (\phi_y l / 3) \times (2/3) l + (\phi_u - \phi_y) l_p (l - l_p / 2)$$

l_p is the length of plastic hinge and may be obtained from the well known expression by Mattock:

$$l_p = 0.5d + 0.05z$$

where d is the effective depth and z is the distance of critical section to the point of contraflexure. lp can be approximately taken as equal to 2d.

Experimental Evidence

Repeated loading tests have been performed on a relatively small, conventionally reinforced cantilever beams containing steel fibres. The specimens were subjected to displacements into the inelastic range to attain a maximum ductility of the order of 4. A significantly greater ductile response was observed in FRC beams than in RC beams.

Hanager (1977) has reported an experimental comparison between two exterior beam–column joints of a typical multistorey frame. One joint was conventionally reinforced while in the other, fibrous concrete was used in addition to stirrups at farther spacing. Superior performance of fibre concrete joint was evident from the results of his investigation.

Lakshmipathy (1983) has studied the replacement of stirrups with fibre concrete in beam–column junctions with various amounts of replacements as shown in Table 17.2.

Loading of tests on RC and FRC joints

Joint cycle	RC J	FR J-1	FR J-2	FRJ-3	FR J-4	Remarks
1 2 3 4						Precracking Elastic Yield Post yield and inelastic
5						do
6						do
7						do
Spacing of stirrups up to 50 cm from the column face	d/4	d/3	d/2	d/3	d/4	
	T—tension	C—compression				

Source: Lakshmipathy 1983.

Typical ductilities attained in RC joints and FRC joints are shown in Fig. 17.12. The increase in ductility is approximately threefold for fibrous joints.





Ductility of (a) RC and (b) FRC joints
(Source: Lakshmipathy 1983)

Lakshmipathy (1983) has also reported an elaborate experimental investigation of two-quarter full-size seven-storey frame, one made of RC and the other of FRC joints. The frames were subjected to earthquake-type lateral load. Figure 17.13 shows a comparison of cumulative energy absorption capacities for the FRC and RC frame. It is evident that the FRC frame exhibits more than twice the cumulative energy absorption capacity as the RC frame.



Cumulative energy absorption capacity of frames
(Source: Lakshmipathy 1983)

With its superior ductility, ability to sustain increased deformation and tensile strain in post-cracking behaviour, and the energy absorption capacity, the fibre-reinforced concrete appears to possess the qualities of an excellent material for earthquake and blast resistance. Extensive research in recent years has shown the advantages of steel-fibre-reinforced concrete in various civil engineering applications. It is known that this material exhibits increased ductility, higher tensile and flexural strengths, and higher toughness. Thus, the material is most suited for earthquake-and blast-resistant structures. The presentation made in this chapter quantifies the improved performance of fibre-reinforced beam column joints and frames. Currently various fibre types are combined as additives with concrete to design a high-performance fibre-reinforced hybrid composite for specific applications intended to achieve optimum mechanical behaviour.

Applications of steel fiber reinforced concrete

Generally SFRC is very ductile and particularly well suited for structures which are required to exhibit:-

1. High fatigue strength resistance to impact, blast and shock loads
2. Shrinkage control of concrete
3. Tensile strength, very high flexural, shear
4. Erosion and abrasion resistance to splitting
5. Temperature resistance, high thermal
6. Earthquake resistance

Review Questions

1. Distinguish between fibre-reinforced concrete and fibre-reinforced mortar.
2. List the applications of fibre-reinforced mortar.
3. What are the basic properties of fibre-reinforced concrete which can be advantageously made use of in the design of structural elements?
4. What is volume fraction and how does it affect the behaviour in tension, flexure, and shear?
5. How is the toughness index obtained for a fibre-reinforced concrete member subjected to compression?
6. In what way can the behaviour of FRC can be used for seismic-resistant design?
7. What is compact cube test? How is it useful in determining the efficiency of FRC in shear?
8. Are confinement of concrete and fibre-reinforcement similar? If so how to use fibre concrete advantageously in resisting shear?
9. What are the application areas of FRC?
10. Why should FRC be used only with regular reinforcement?

திரு. S.D. கண்ணன்
Taxation Committee

TCS Rate Chart for FY 2024-25

TCS Rate Chart for FY 2024-25 (AY 2025-26)				
Section	**Code**	**Nature of Payment**	**Rate**	**Threshold (₹)**
206C (1)	6CA	Alcoholic Liquor for human consumption	1%	-
206C (1)	6CB	Timber obtained under a forest lease	2.50%	-
206C (1)	6CC	Timber obtained by any mode other than under a forest lease	2.50%	-
206C (1)	6CD	Any other forest produce not being timber or tendu leaves	2.50%	-
206C (1)	6CE	Scrap	1%	-
206C(1C)	6CF	Parking lots	2%	-
206C(1C)	6CG	Toll Plaza	2%	-
206C(1C)	6CH	Mining and quarrying	2%	-
206C(1)	6CI	Tendu leaves	5%	-
206C(1)	6CJ	Minerals, being coal or lignite or iron ore	1%	-
206C(1F)	6CL	Sale of Motor Vehicle	1%	> 10 lakh
206C(1G)	6CO	Sale of overseas Tour Program package	5% 20%	<= 7 Lakh > 7 Lakh
206C(1G)	6CP	Remittance under LRS for educational loan taken from financial institution mentioned in Section 80E	0.50%	> 7 lakh
206C(1G)	6CQ	Remittance under LRS for purpose other than for purchase of overseas tour package or for educational loan taken from financial institution		
		Education and Medical remittance	5%	> 7 lakh
		Other foreign remittances	20%	> 7 lakh
206C(1H)	6CR	Sale of goods	0.10%	> 50 lakh

TDS Rate Chart for FY 2024-25

TDS Rate Chart for FY 2024-25 (AY 2025-26) w.e.f 1-Oct-2024			
Section	**Nature of Payment**	**Rate**	**Threshold Limit (₹)**
192	Payment of Salary	Normal Slab Rate	-
194	Dividend	10%	5,000
194A	Interest on Bank Deposit/Post Office Deposit/Banking Co-Society Deposit (Interest other than "Interest on securities")	10%	(a) Senior Citizen- 50,000 (b) Others- 40,000
194A	Interest other than "Interest on securities" (Other than Bank Deposit/Post Office Deposit/Banking Co-Society Deposit)	10%	5,000
194B	Income from lottery winnings, card games, crossword puzzles, and other games of any type	30%	10,000
194BA	Winnings from online games	30%	-
194BB	Income from horse race winnings	30%	10,000
194C	Payment to contractor/sub-contractor:		Single transaction- 30,000 Agg transactions- 1,00,000
	- Individuals/HUF	1%	
	- Other than Individuals/HUF	2%	
194D	Insurance commission		15,000
	- Individuals	5%	
	- Companies	10%	
194DA	Payment in respect of life insurance policy	2%	1,00,000
194H	Commission or brokerage	2%	15,000
194I	Rent		
	194-I(a) Plant & Machinery	2%	2,40,000
	194-I(b) Land or building or furniture or fitting	10%	
194IA	Payment on transfer of certain immovable property other than agricultural land property other than agricultural land	1%	50,00,000
194IB	Payment of rent by Individuals or HUF not liable to tax audit	2%	50,000 per month
194J	Fees for professional or technical services		30,000
	i) sum paid or payable towards fees for technical Services	2%	
	ii) sum paid or payable towards royalty in the	2%	

	nature of consideration for sale, distribution or exhibition of cinematographic films;		
	iii) Any other sum	10%	
194Q	Payments for the purchase of goods	0.10%	50,00,000
194R	Perquisite or benefit to a business or profession	10%	20,000
194S	Payment on transfer of virtual digital assets	1%	Specified Persons- 50,000 Others- 10,000



கட்டுமான இடத்தில் ஏற்படும் பிரச்சனைகளும், தீர்வுகளும்

மேற்பார்வைப்பணி அமைக்கும்போது கற்க வேண்டிய அனுபவங்கள்

Er.A.G.Marimuthuraj

சமீபத்தில் நான் சந்தித்த ஒரு பிரச்சனையைப் பற்றியும், அதனால் உருவான என் மன உளைச்சல் பற்றியும் மற்றும் எனக்கு ஏற்பட்ட நஷ்டம் குறித்தும், அதில் இருந்து நான் கற்றுக் கொண்ட பாடல் குறித்தும் இங்கே உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கின்றேன். ஏனென்றால் வளர்ந்து வரும் பொறியாளர்களுக்கு இது பேருதவியாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

என் உறவுக்காரர் ஒருவரின் வீட்டை கட்டிக் கொடுக்கம் பொறுப்பை சில மாதங்களுக்கு முன் நான் ஏற்று நன்றாகத்தான் கட்டிக் கொண்டு வந்தேன். அவர் கொடுத்த வரைபடத்தின்படி, நான் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி அவரும் வேலை முடிய முடிய பணம் பட்டுவாடா செய்த கொண்டிருந்தார். வேலை நடைபெறும்போது பல உறவினர்கள் வீட்டைப் பார்வையிட வந்து சின்னச் சின்ன மாற்றத்தை சொல்லிவிட்டு போவார்கள். அவற்றையெல்லாம் செய்து கொடுத்து வந்தேன். கட்டட வேலை இறுதிக்கட்டத்தை நெருங்கும்போதுதான் பிரச்சனையே உருவானது. அது என்னவென்றால்,

வீட்டின் வெளிச் சுவற்றில் மற்றும் பால்கனியில் கதவு, ஜன்னல் வைத்து இருந்தோம். திடீர் என்று ஒரு சாரல் மழை விசத் துவங்கியது. அந்த சாரல் மழையில் தண்ணீர், வெளிப்பக்க சுவற்றிலும், பால்கனியில் அமைந்துள்ள ஜன்னல் வழியே வீட்டினுள்ளம் நிறைய வந்துவிட்டது. அது மட்டும் இன்றி, வீட்டினுள் தளத்தில் தண்ணீர் தெப்பக்குளம் போல் தேங்கிவிட்டது. இதைப்பார்த்த உரிமையாளருக்கு வந்ததே கோபம் அதைச் செல்ல வார்த்தையே இல்லை. தளம் விலை உயர்ந்த கிரானைட் கல் வேறு, என்னை வாட்டு வாட்டு என்று வாட்டிவிட்டார். அந்த நேரம் பார்த்துத்தான் என் இறுதி பில்லை அவரிடம் கொடுத்திருந்தேன். அவர் “பணம் கொஞ்சம் கஷ்டம் இருக்கு அடுத்த மாதம் தருகிறேன்” என்று வேறு சொல்லியிருந்தார். இந்த நேரத்தில் இப்படி ஆகவும், எல்லாம் மோசம் போச்சு.

என்ன இப்படி ஏமாற்றி விட்டீர்களே என்று சகட்டமேனிக்கு திட்டித் தீர்த்தார். நான் சற்றுப் பொறுமையாக இருந்து அவரை சமாதானம் செய்தேன். எவ்வளவு சொல்லியும் அவர் சமாதம் ஆக மறுத்துவிட்டார். இரண்டு மூன்று தினங்கள் கழித்து மீண்டும் அவரை நேரில் சந்தித்து மெல்ல சரியான விளக்கத்தைக் கொடுத்தேன்.

நீங்க கவலைப்படாதீர்கள் சார் எவ்வளவு செலவு ஆனாலம் பரவாயில்லை. இந்தக் குறையை நிவர்த்தி செய்து தருகின்றேன் என்ற உறுதியை நான் தந்தபிறகுதான் அவர் ஓரளவு சமாதானம் ஆனார். அதற்கு பிறகு நான் பிரச்சனையை ஆராய்ந்தேன்.

என்ன பிரச்சனை என்றால், வெளிச்சுவற்றில் ஜன்னல், கதவு வைக்கும்போது அதன் அகலம், உயரம் இவற்றிற்கு ஏற்றாற்போல் சன்சைடு நீளம் மற்றும் அகலத்துடன் அளக்க வேண்டும். இந்த விதிமுறை அங்கே பின்பற்றப்படவில்லை. அதனால் சாரல் வீட்டின் உள்ளே வந்துவிட்டது..

இரண்டாவது வீட்டினுள் தண்ணீர் தேங்கக் காரணம், ஒரு சில கிரானைட் கல்லில், கண்ணுக்குத் தெரியாத குழி இருப்பது கவனிக்கப்படவில்லை. மேலும் தள வேலை இறுதிக் கட்டப் பணி என்பதால் பொறியாளருக்கும், உரிமையாளருக்கும் பணப்பிரச்சனை ஒரு பக்கம்.

வேலையை முடிக்க வேண்டுமே என்ற எண்ணமும் மேலோங்கி இருப்பதால், சரியான வேலை ஆள் ஆமையாதபோது, தகுந்த மேற்பார்வையும் இல்லாத காரணத்தால் தளத்தில் மேடு பள்ளம் ஏற்பட்டுவிடும். இது கண்பார்வைக்குத் தெரியாது. தண்ணீர் விட்டுப் பார்த்தால்தான் தெரியவரும்.

இந்த இரண்டு பிரச்சனைக்கும் திர்வாக ஜன்னல் கதவுக்குத் தேவையான சன்சைட்டை மறுபடி அமைத்து மற்றும் தளத்தில் பதித்த விலை உயர்ந்த கிரானைட் கற்களை உடைத்து எடுத்து அதற்குப்பதில் அதே கல்லைத் தேடிப்பிடித்து வாங்கி மீண்டும் அமைத்து அந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்தேன்.

இந்த சிறு அஜாக்கிரதையினால் இருவருக்கும் ஏற்பட்ட மன உளைச்சலுக்கும், பொருள் நட்டத்திற்கும் அளவில்லை என்றாலும் உறவில் சற்று விரிசல் எழுந்துவிட்டதுதான், பெரிய பிரச்சனையாகும். இந்த வேலையைச் செய்யாது இருந்திருக்கலாமோ என்ற எண்ணம் தோன்றும் அளவு உருவாகிவிட்டது.

ஆகையினால், இளம் பொறியாளர்களே, தெரியாதவர்களுக்கு வேலையைச் செய்து கொடுக்கும்போது நாம் எடுத்துக் கொள்ளும் கவனத்தைவிட கூடுதலான கவனத்தை உறவுக்காரர்கள் கட்டிடம் கட்டும் போது எடுக்க வேண்டும் என்று புரிந்து கொள்ளுங்கள். முள்மீது போட்ட சேலை போல, இந்த விஷயம் என்பதை என் அனுபவத்தில் நான் அறிந்து கொண்டேன்.

கட்டிடம் துவங்கும் போது இருக்கும் மேற்பார்வை தீவிரம் என்பது அது முடியும் கட்டத்தில், அதிகப்படியானதாக இருக்க வேண்டும் என்பதே இக்கட்டுரையின் தீர்வு. இறுதிக்கட்டம் என்பதால் நாம் ஆறு மாதம் செய்த உழைப்பு இறுதிக் கட்டத்தில் ஓர் இரு நாள் வேலை செய்வதால் கெட்டுப்போகும் என்பதை மறவாதீர்கள்.

நீங்கள் நல்ல கட்டிடப் பொறியாளராக இருந்து பலனில்லை. உங்கள் தொழிலாளர்கள், உங்கள் டீம் திறமைமிக்கதாக கணக்கம் இல்லாததாக இருத்தல் வேண்டும்.

அடுத்து கட்டுமானச் சந்தையில் பரபரப்பாகப் பேசப்படும் ஒரு நவீன கட்டுமானப் பொருளான ரெடிமேட் சுவர்களைப் (முன் தயாரிப்பு கனம் குறைந்த சுவர்கள்) பற்றி இப்பகுதியில் பார்ப்போம்.

முன் தயாரிப்பு கனம் குறைந்த சுவர்கள் (Readymade Walls)

இன்றைய நவீன, அதிவிரைவான உலக வாழ்க்கைக்கு ஈடுகொடுக்கும் விதமாக, கட்டுமானத் துறையில் வந்துள்ள புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய முன் தயாரிப்பு கனம் குறைந்த சுவர்கள் அதிக பயன் உள்ளதாக அமைந்துள்ளன.

இதனால் கட்டுமானத்தில் ஏற்படும் காலவிரயத்தை இது குறைப்பதுடன், பணியாளர்களின் எண்ணிக்கையையும், அவர்களுக்கு கொடுக்கக் கூடிய கூலியும் குறைந்து, மேலும் அதிக வேகமான எளிய முறையிலான வகையில் பணி நடைபெறவும் துணைபுரிகிறது.

வலிமை, விரைவு மற்றும் பாதுகாப்பு நிறைந்த பல்வேறு அம்சங்களை கவனித்தில் கொண்டு இத்தகைய சுவர்கள் தயாரிக்கப்படுகின்றன. உலகத் தரத்தில் என்றால் அது மிகையாகாது. இத்தகைய சுவர்களை, எந்தவித சேதாரமும் இன்றி எளிதாகப் பிரித்து எடுத்து மீண்டும் வேறு இடத்தில் பயன்படுத்திக் கொள்ளுவதே இதன் சிறப்பு அம்சமாகும்.

செங்கல் மற்றும் Hollow, Solid Block சுவர்களைப் போன்று இச்சுவருக்கு பூச்சு வேலை என்பது தேவையில்லை. இச்சுவற்றில் மேல் அப்படியே பட்டி பார்த்து, பெயிண்ட் செய்து அழகுபடுத்தி விடலாம். இதனால் கட்டுமானச் செலவில் ஒரு பெரும்பகுதி மிச்சம் ஆகும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

இச்சுவர்களின் பராமரிப்புச் செலவு என்பது மிக மிகக் குறைவானது. அது மட்டுமின்றி, இதில் விரிசல் வெடிப்பு ஏதும் ஏற்படாது என்பது மிக சிறப்பு அம்சமாகும். இவை எடை குறைவாக இருப்பதால் எளிதாக எடுத்துச் செல்லவும், ஒன்றுடன் ஒன்றை இணைப்பதற்கம் அதிக செலவு ஆவதில்லை. இச்சுவர் அமைப்பதற்கு அதிகப்படியான வேலை இடம் தேவை இல்லை. குறைவான இடமே போதுமானதாகும். அதுபோல் இச்சுவர் ஈரத்தடுப்பு, தீ தடுப்பு சத்தத் தடுப்பு முதலான பல்வேறு சிறப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது என்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

Fibre Reinforced Aerated cement concrete readymade walls, ஒரே மாதிரியான இணைப்புடன் Grovel Joint முறையில் கட்டமைக்கப்படுகின்றன என்றால் அது மிகையாகாது.

இவை குடியிருப்பு, வணிக வளாகங்கள் மற்றும் தொழிற்சாலைகள் முதலான கட்டுமானப் பகுதியில் மழை, வெயில், படாத உள் அறை அமைப்புக்கு பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன. இவை 50mm முதல் 75mm கனத்தில், உச்சபட்ச உயரமாக 4.5 மீட்டர் வரையிலும் தயாரிக்கப்படுகிறது.

குறிப்பு

1. மூன்று அல்லது நான்கு நபர்கள் மூலமாகவே இச்சுவற்றை செங்குத்துவாக்கில் எடுத்துச் செல்ல வேண்டியது முக்கியமானதாகும்.
2. வண்டியில் இச்சுவரை ஏற்றி ஓர் இடத்தில இருந்து மற்றொரு இடத்திற்க எடுத்துச் செல்லும் போது அதன் முனைப் பகுதிகள் காயம் ஏற்படாதபடி தக்க பாதுகாப்பு முறையைக் கையாண்டு எடுத்துச் செல்ல வேண்டும்.
3. இச்சுவர்களை எப்போதும் தரையில் செங்கத்தாகவே நிறுத்தி வைக்க வேண்டும். படுக்கை வாக்கி கீழே போடக்கூடாது.
4. தரை மட்டத்தில 150mm முதல் 20mm உயரத்திற்கு இதை நிறுத்தி வைக்க வேண்டும்.
5. இச்சுவற்றில் தண்ணீர் மற்றும் தாது படியாத தக்க பாதுகாப்பு முறையை மேற்கொள்ள வேண்டும்.

ABSTRACT

